FWC

**யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre
## தவணைப் பரீட்சை, யூன் - 2016
## Term Examination, June - 2016

| தரம் :- 13 (2016) | புள்ளித்திட்டம் | நாடகமும் அரங்கியலும் – II |
|---|---|---|

### பகுதி - I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | **1** | 11) | **2** | 21) | **2** | 31) | **2** |
| 02) | **3** | 12) | **2** | 22) | **2** | 32) | **3** |
| 03) | **4** | 13) | **1** | 23) | **4** | 33) | **1** |
| 04) | **1** | 14) | **1** | 24) | **1** | 34) | **2** |
| 05) | **4** | 15) | **1** | 25) | **2** | 35) | **1** |
| 06) | **2** | 16) | **5** | 26) | **3** | 36) | **3** |
| 07) | **1** | 17) | **2** | 27) | **4** | 37) | **1** |
| 08) | **2** | 18) | **4** | 28) | **5** | 38) | **1** |
| 09) | **2** | 19) | **4** | 29) | **2** | 39) | **2** |
| 10) | **4** | 20) | **1** | 30) | **1** | 40) | **3** |

### பகுதி - II

### பிரிவு - A

01)

i) சீஸர், புருட்டஸ், மார்க் அன்ரனி, கஸ்சியஸ், கய்ஸ்கா

ii) சீஸர்
- ✶ தனது நண்பனையே நம்பி நடப்பவர்.
- ✶ நாட்டு மக்களுக்காக பாடுபடுபவர்.
- ✶ மனைவியின் கருத்தைக் கேட்பவர்
- ✶ மனங்குழம்பும் இயல்புடையவர்.
- ✶ பதவிகள், பட்டங்களுக்கு ஆசைப்படாதவர்.
- ✶ எதையும் தாங்கும் இதயமுடையவர்.

புறூட்டஸ்
- ✶ பழிவாங்கும் மனம் உடையவர்
- ✶ பதவி ஆசை கொண்டவன்.
- ✶ திட்டம் போட்டு சதி செய்பவன்
- ✶ நன்றி மறந்தவன்

மார்கட் அன்ரனி
- ✶ நிலையான மனம் கொண்டவன்
- ✶ நேர்மையாளன்
- ✶ சீசருக்காக எதையும் செய்யக் கூடியவன்
- ✶ தீங்கு இளைப்பவர்களை தண்டிப்பவன்
- ✶ நாட்டுப் பற்றுடையவன்
- ✶ சீசரின் பெருமையை மக்களுக்கு உணர்த்துபவன்

iii) நாட்டுக்குத் தலைவனாக ஒரு நல்மனிதனாக சீஸர் வருவதற்கு விரும்பாத கயவர்களது சதித்திட்டங்கள் ஒவ்வொன்றும் சீசரது மரணத்திற்கு காரணமாக அமைந்தாலும் இறுதியில் ஒவ்வொருவரும் தமது மரணத்திற்கு தாமே காரணமாக இருந்து உயிர் நீப்பதை காணலாம். (என்பதை தகுந்த ஆதாரங்களுடன் விளக்கியிருப்பின் 6 புள்ளிகள் வழங்கவும்)

02) i) கென்றி இப்சன்

ii) நத்தார் மரம்
மெழுகுவர்த்தி
நிலையான கதிரை
ஆடுகதிரை
மெக்ரூன்

iii)
- ✶ யதார்த்தமோடி நாடகமான இதன் கருவானது சமகால சமூகத்தினூடாகப் பெறப்பட்டுள்ளமையால் அதற்குப் பொருத்தமான நடிப்பு மோடியாக யதார்த்த நாடகமோடி பயன்படுத்தப்பட்டுள்ளது.
- ✶ நோறா, ஹெல்மர் போன்றோரின் நடிப்பில் உள்ளார்ந்த நடிப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது.
- ✶ நாடகத்தின் சகல நிகழ்வுகளும் வீட்டினுள்ளேளே நிகழுகின்றமை.
- ✶ முப்பரிமாணப் பின்னணியும் இயற்கையான அரங்கப் பொருட்களும் பயன்படுத்தப் பட்டுள்ளமை

  உ+ம் :- கதிரை, குடை, சாய்மனைக் கதிரை, உணவுத் தட்டுக்கள், கோப்பைகள்,
  புத்தக அலுமாரி
- ✶ நோறா இனது பாத்திரத்தின் உள்ளார்ந்த மனோபாவங்களை வெளிக்கொணருவதற்காக "தரந்தலா" நடனம் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- ✶ நாடகத்தின் ஆடையணிகள் இயல்பான மரபின்படி பயன்படுத்தப்பட்டுள்ளமை
- ✶ இசை இயல்பான வகையிலும் சமயோதிதமானகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

  உ+ம் :- ஹெல்மர் பியானோ இசைக்கும் போது நோறா நடனமாடுகிறார்.

03) i) அரச நீதிக்கும் - தெய்வ நீதிக்கும் இடையிலான போராட்டம்.

ii)
- ✶ அன்ரிக்கனி நாடகத்திலே பொலிநிசனை நல்லடக்கம் செய்யக்கூடியது என மன்னன் கிரயன் தடுத்தல் செயற்பாடு
- ✶ அன்ரிக்கனி பொலிநிசனை அடக்கம் செய்ய துணியும் செயற்பாடு
- ✶ அடக்கம் செய்யப்படும் போது அன்ரிக்கனி கையும் மெய்யுமாகப் பிடிபடல்
- ✶ கிரயன் மூலம் தண்டனை அனுபவித்தல்
- ✶ ஏமன் உயிர் துறத்தல்
- ✶ அவலம் தாங்க முடியாமல் கிரயன் உயிர் துறத்தல் மூலம் அவலம் வளர்க்கப்படுகின்றது.

iii) **அன்ரிக்கனி**
- ✶ பெண்மையின் பரிசுத்த வடிவமானவள்
- ✶ மாறுபட்ட பாசம் உள்ளவள்
- ✶ தனது காதலையும், உயிரையும் தியாகம் செய்தவள்
- ✶ தெய்வ நீதிக்காக போராடுபவள்
- ✶ அவலங்களை எதிர் கொள்பவள்

**கிரயன்**
- ✶ சட்டத்துக்காக போராடுபவன்
- ✶ தேசப்பற்று
- ✶ பழிவாங்கும் மனோபாவம்
- ✶ உறவு பாராட்டதவன்
- ✶ தான் இட்ட கட்டளையை மீறாதவன்
- ✶ தண்டனை வழங்க துணிந்தவன்
- ✶ மகன் மீது பாசம் கொண்டவன்
- ✶ மனைவியின் பிரிவை தாங்க முடியாதவன்
- ✶ தன்னையே தான் மாய்த்துக் கொள்பவன்.

**இசுமணி**
- ✶ சகோதர பாசம் கொண்டவள்
- ✶ தெய் நீதியை விட மனித நீதிக்கு பயந்தவள்
- ✶ சட்டத்திற்கு பயந்தாலும் சாகத் துணிபவள்
- ✶ தற்துணிவற்றவளாக காணப்படுகின்றாள்.
- ✶ உயிர் வாழ்வதற்கான உதவியை எதிர்பார்ப்பவள்

## பிரிவு - B

04)

**i)** குழந்தை ம. சண்முகலிங்கம்

- ✶ நாடகத் தலைமுறை ஒன்றின் தாய் எனப் பேராசிரியர் கா. சிவத்தம்பியால் வர்ணிக்கப் படுபவர்.
- ✶ நடிகர், நாடக ஆசிரியர், நெறியாளர், ஆய்வாளர், நாடகப் போதனா ஆசிரியர் ஆக செயற்பட்டவர்.
- ✶ நாடக அரங்கக் கல்லூரியை நிறுவியவர்.
- ✶ ''அருமை நண்பன்:'' என்னும் நாடகத்தின் மூலமாக நாடக ஆசிரியராக அறிமுகமாகி இன்றுவரை 150ற்கு மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார்.
- ✶ இவர் எழுதிய நாடகங்களில் ''மண் சுமந்த மேனியர்'' இவரை மிகச் சிறந்த நாடக ஆசிரியராக தமிழ் நாடக உலகிற்கு அறிமுகமாக்கியது.
- ✶ சுய ஆக்க நாடகங்களை எழுதுவதோடு நல்லாது மொழிபெயர்ப்பு நாடகங்களை தமிழ் நாடகத் துறைக்கு தந்தார்.

  உ+ம் :- இப்சனின் ஒரு பாவையின் வீடு சோபோகிளிசின் டிப்பஸ் மன்னன்
- ✶ இவரது நாடகங்களை பின்வருமாறு வகுத்து நோக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1) | அண்ணத்துறை பாணி நாடகம் | உ+ம் :- | அருமை நண்பன் |
| 2) | வரலாற்று வடிவ நாடகங்கள் | உ+ம் :- | வையத்துள் தெய்வம் |
| 3) | கதையோட்ட நாடகம் | உ+ம் :- | உறவுகள் |
| 4) | உரைஞர்முறை நாடகங்கள் | உ+ம் :- | நெடும் பயணம் |
| 5) | குறியீட்டு நாடகம் | உ+ம் :- | தாயுமாய் நாயுமானவர் |
| 6) | பாத்திரவாக்க நாடகம் | உ+ம் :- | எந்தையும் தாயும் |
| 7) | உளச்சிகிச்சை நாடகம் | உ+ம் :- | அன்னை இட்ட தீ |
| 8) | சிறுவர் நாடகங்கள் | உ+ம் :- | கூடிவிளையாடு பாப்பா,<br>முயலார் முயல்கிறார்,<br>இடுக்கண் வருங்கால்<br>பஞ்சவர்ண நரியார் |

- ✶ இவரது அரங்கின் பொதுப்பண்புகளாக மேலைத்தேய நாடகக் கோட்பாடுகள் கிரேக்க அவலச்சுவையின் கோரஸ் முறையை மகிழ் நெறியின் அங்க வீச்சுக்கள், இப்சனின் சமுதாய சித்தரிப்புமுறை, பெடோல் பிரைக்டின் தொலைப்படுத்தல்முறை, கீழைத்தேய கூத்துக்களின் ஆட்டம் என்பவற்றின் உள் வாங்கிய வடிவமே இவரது அரங்க முறைமையில் புலப்படுகின்றது.

**ii) நா. சுந்தரலிங்கம்**

- ✶ பல்கலைக்கழக நாடக அரங்கில் பயிற்சி பெற்றவர்.
- ✶ 1969 இல் ''அபசுரம்'' என்ற அபத்தசாயல் கொண்ட புதியமுறை நாடகமொன்றை எழுதி மேடையிட்டவர்.
- ✶ வழிப்பு என்ற நாடகத்தை எழுதி நெறிப்படுத்தினார்.
- ✶ நாடக நெறியாளராய், நடிகராய், எழுத்தாளராய் இருந்தவர்.
- ✶ நடிப்பு முறைமையில் யதார்த்த நடிப்பு மோடியுற்ற நடிப்பு இரண்டையும் தேவையறிந்து பயன்படுத்தினார்.

**iii) கலையரசு க. சொர்ணலிங்கம்**

- ✶ தனது 11வது வயதில் நாடகத்துறையில் பிரவேசித்தார்.
- ✶ 70 வருடங்கள் வரை அத்துறையில் இருந்தார்.
- ✶ பம்பல் சம்பந்த முதலியாரை மானசீகக் குருவாகக் கொண்டு அவருடைய நாடகங்களை மேடையேற்றினார்
- ✶ இவரது நாடகங்கள் படைச்சட்ட மேடையில் ஆற்றப்பட்டமை யதார்த்தத்தை கொண்டு வருவதற்கும், யதார்த்தத்தின் மருட்கையை ஏற்படுத்துவதற்கும் உதவியது.
- ✶ கூனி பற்றிய நடிப்புக்கு கலையரசு மிக முக்கியத்துவம் கொடுத்தள்ளார்.
- ✶ இவர் நடித்த நாடகங்களாக அரிச்சந்திரா, சிம்களநாதன், சாரங்கதாரா, தோள உலகம், மனோகரா, நீ விரும்பிய விதமே, சகுந்தலை வாணிபுரத்து வணிகனை குறிப்பிடலாம்.

05) i) மட்டக்களப்பு - வடமோடி, தென்மோடி, மகுடி கூத்து, பறைமேளக் கூத்து, வசந்தன் கூத்து
மலையகம் - காமன்கூத்து, அருச்சுனன் தபசு, பொன்னர் சங்கர்
மன்னார் - வடபாங்கு
தென்பாங்கு, வசாப்பு
யாழ்ப்பாணம் - வடமோடி, தென்மோடி, வசந்தன் கூத்து, காத்தவராயன், நாட்டை
முல்லைத்தீவு - கோவலன் கூத்து, மகுடிக்கூத்து, காத்தவராயன் கூத்து

ii) வடமோடி - தென்மோடி ஆற்றுகைகளை கதை, ஆடல், பாடல், அவைக்காற்றுமுறை, வேட உடை ஒப்பனை ரீதியாக ஒப்பிட்டு எழுதினால் 5 புள்ளிகள் வழங்கவும்.

iii) மலையக கூத்ததுக்களான
1) காமன் கூத்து
2) அருச்சுனன் தபசு
3) பொன்னர் - சங்கர் போன்ற கூத்துக்களை விபரித்து எழுதினால் 5 புள்ளிகள் வழங்கவும்.

06)

**i) தஹட்டசன்னிய**

- ✶ சிங்கள மக்களின் சடங்காகும்.
- ✶ ருகுணு பிரதேசத்தில் நடைபெறும்
- ✶ சங்கபால மன்னனுக்கும், அரசிக்கும் பிறந்த அரசகுமாரன் அநியாயமாக தனது தாயை கொலை செய்த தந்தை
- ✶ இது நோய் தீர்க்கும் சாந்தி சடங்காகும்.
- ✶ இதில் நாடகப் பண்புகள் காணப்படுகின்றன.
  உ+ம் :- அபிநயம், அரங்கு, அரங்கப் பொருட்கள் வேடஉடை

**ii) யப்பானிய பாவை அரங்கு**

- ✶ 17ம் நூற்றாண்டில் பிரசித்தி பெற்றது.
- ✶ பாவைகளை இயக்க தலைமை இயக்குனர் 2 உதவியாளர்களும் தேவைப்பட்டனர்.
- ✶ பாவைகளை இயக்கும் மேடையில் பின்திரை காணப்படும்
- ✶ இவ் மேடையில் ஜொறுதி, இசைவாசிப்பவர் இருவர் காணப்படுவர்
- ✶ ஜொறுதி என்பவர் பாவைகளிற்கு குரல் கொடுப்பவர்.
- ✶ பாவையை இயக்கும் உதவியாளர்கள் உச்சிமுதல் உள்ளங்கால் வரை முழுக்க மூடிய கறுத்த உடை அணிபவர்.

**iii) பாண்டவர் வனவாசம்**

- ✶ பாரதக் கதையை மீள நிகழ்த்திக் காட்டும் சடங்காகும்.
- ✶ பாண்டவர்கள் வேடமிட்டு வனவாசம் செல்வர்
- ✶ வாள் மாற்று சந்தியில் வாளை வீமன் தருமனிடம் இருந்து பெறுவார்
- ✶ பின்பு வனவாச கால பொறுப்பை எடுக்கிறார்.
- ✶ பஞ்ச பாண்டவர்களுடன் நேத்தியை நிறைவேற்றும் பொருட்டு மக்களும் இணைகின்றனர்.

**iv) சொக்கரி**

- ✶ சொக்கரி அழகிய மாது எனப் பொருள்படும்
- ✶ பத்தினி தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையது
- ✶ விவசாய செழிப்பு, சௌபாக்கியம் வேண்டி நிகழ்த்தப்படுவது
- ✶ பாத்திர அறிமுகம் செய்பவர் குரு நான்சே
- ✶ அரங்கவெளி - களத்துமேடு
- ✶ ஆண்கள் மட்டும் நடித்தல்

**v) மகிடிக் கூத்து**

- ✶ மந்திர தந்திர விளையாட்டுக்கள் நிறைந்தது.
- ✶ மட்டக்களப்பில் நிகழ்த்தப்படுவது.
- ✶ 3 வகை மகுடி கூத்துக்கள் உண்டு.
- ✶ நீள்சதுர அரங்கில் நிகழ்த்தப்படும்.